# தஞ்சை வேளாண் கல்லூரிக்கு எம்.எஸ்.சுவாமிநாதன் பெயர்

## பேரவையில் முதல்வர் அறிவிப்பு

**சென்னை, அக். 11:** தஞ்சாவூர் மாவட்டம் ஈச்சங்கோட்டையிலுள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்துக்கு டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் பெயர் சூட்டப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

இது குறித்து, சட்டப் பேரவையில் விதி எண் 110-ன் கீழ் புதன்கிழமை அவர் படித்தளித்த அறிக்கை:-வேளாண் அறிவியலை 20-ஆம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு ஏற்றவாறு பயன்படுத்தும் பல்வேறு ஆராய்ச்சிகளை வெற்றிகரமாக நிகழ்த்திக் காட்டி உலக அளவில் புகழ்பெற்றவர் எம்.எஸ்.சுவாமிநாதன்.

முன்னாள் முதல்வர் கருணாநிதி மீது அளப்பரிய அன்பு கொண்டவர் எம்.எஸ்.சுவாமிநாதன். கருணாநிதி மறைவின்போது மிக உருக்கமான இரங்கல் குறிப்பை பதிவு செய்திருந்தார். திமுகவின் ஆட்சி எப்போதும் உழவர் நலன் நாடும் ஆட்சியாகவே இருந்தது எனப் பாராட்டியுள்ளார்.

'பசுமைப் புரட்சியின் தந்தை' எனப் போற்றப்படும் எம்.எஸ்.சுவாமிநாதன் மறைந்தபோது, அவரின் உடலுக்கு நேரில் அஞ்சலி செலுத்தினேன். அரசு சார்பில் இறுதி மரியாதையும் செலுத்தப்பட்டது.



தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டையில் உள்ள வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்துக்கு வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் பெயர் சூட்டுதல், வேளாண் அறிவியல் மாணவர்களுக்கு அவரது பெயரில் விருதுகள் வழங்குதல் உள்ளிட்ட அறிவிப்புகளை பேரவையில் வெளியிட்டுப் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த வேளாண் விஞ்ஞானியான டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன், இந்திய அளவில் முத்திரை பதித்து, உலக அளவில் புகழ் பெற்றவர். பத்ம விபூஷண், ரமோன் மகசேசே உள்ளிட்ட உயரிய விருதுகளைப் பெற்றுள்ள அவரின் நினைவைப் போற்றும் வகையில் தமிழக அரசும் கௌரவிக்கவுள்ளது.

அதன்படி, தஞ்சாவூர் மாவட்டம் ஈச்சங்கோட்டையிலுள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், இனி 'டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்' என்று அழைக்கப்படும். அதேபோன்று, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இளம் வேளாண் அறிவியலில் பயிர்ப் பெருக்கம், மரபியல் பாடங்களில் அதிக மதிப்பெண் பெற்று முன்னிலையில் வரும் மாணவருக்கு, டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் பெயரில் ஆண்டுதோறும் விருது வழங்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

**அனைத்துக் கட்சிகளும் வரவேற்பு:** சட்டப் பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட அறிவிப்புக்கு அதிமுக, பாஜக உள்ளிட்ட பேரவையில் இடம்பெற்றுள்ள அனைத்துக் கட்சிகளும் பாராட்டுத் தெரிவித்தன.

## இஸ்ரேலிலிருந்து இந்தியர்களை மீட்க 'ஆபரேஷன் அஜய்'

**புது தில்லி, அக். 11:** இஸ்ரேல்-ஹமாஸ் இடையே மோதல் தீவிரமாகி உள்ள நிலையில், இஸ்ரேலில் உள்ள இந்தியர்களைத் தாயகம் அழைத்து வர 'ஆபரேஷன் அஜய்' தொடங்கப்படும் என வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் புதன்கிழமை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் 'எக்ஸ்' சமூகவலைதளப் பதிவில், 'இஸ்ரேலிலிருந்து தாயகம் திரும்ப விரும்பும் இந்திய குடிமக்களை அழைத்து வர 'ஆபரேஷன் அஜய்' மீட்புத் திட்டம் தொடங்கப்படுகிறது.

இதற்கென தனி விமானங்களும் பிற ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இஸ்ரேலில் சுமார் 18,000 இந்தியர்கள் வசித்து வருகின்றனர். அவர்களில் முதல் குழு சிறப்பு விமானம் மூலம் இந்தியாவுக்கு வியாழக்கிழமை அழைத்து வரப்பட உள்ளது.

## பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம்: மயிலாடுதுறை மாவட்டம் சேர்ப்பு

**சென்னை, அக். 11:** பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலப் பகுதியில் மயிலாடுதுறை மாவட்டம் சேர்க்கப்பட்டுள்ளது. இதற்கான சட்ட மசோதா தமிழக சட்டப்பேரவையில் புதன்கிழமை குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேறியது.

வேளாண்மைத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தாக்கல் செய்த மசோதாவில் கூறப்பட்டுள்ளதாவது:- தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தை மேம்படுத்த முதல்வர் தலைமையில் தனி அதிகார அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பில் நீர்வளத் துறை அமைச்சர் மற்றும் அந்தத் துறையின் செயலர், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறையின் அமைச்சர் மற்றும் அந்தத் துறையின் செயலர் ஆகியோரை இணைத்துக் கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தில் மயிலாடுதுறை மாவட்டமும் இணைக்கப்படுகிறது. வேளாண் மண்டலச் சட்டத்துக்குள் வேளாண்மையுடன் கால்நடை பராமரிப்பு மற்றும் உள்நாட்டு மீன்வளமும் சேர்த்துக் கொள்ளப்படுகிறது. இதற்கு சட்ட மசோதா வழிவகை செய்கிறது எனக் கூறப்பட்டுள்ளது.

# ககன்யான் திட்டம்: அக்.21-இல் முதல்கட்ட சோதனை

**புது தில்லி, அக். 11:** ககன்யான் விண்கலத்தை விண்ணுக்கு அனுப்பி, பாதுகாப்பாக மீண்டும் பூமிக்கு கொண்டு வரும் முதல்கட்ட சோதனை அக். 21-ஆம் தேதி நடைபெறும் என மத்திய அறிவியல்-தொழில்நுட்பத் துறை அமைச்சர் ஜிதேந்திர சிங் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

மனிதர்களை விண்கலம் மூலம் பூமியின் சுற்றுவட்டப் பாதையின் 400 கி.மீ. தொலைவுக்கு கொண்டு சென்று, பாதுகாப்பாக மீண்டும் பூமிக்கு கொண்டுவரும் ககன்யான் திட்டம் அடுத்த ஆண்டு செயல்படுத்தப்பட உள்ளது. இதற்கான பல்வேறுகட்ட சோதனைகளை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) மேற்கொண்டு வருகிறது.



ககன்யான் விண்கலம்.

இந்நிலையில், விண்கலத்தை ராக்கெட் மூலம் விண்ணுக்கு அனுப்பும் முதல்கட்ட சோதனை அக். 21-இல் நடைபெறும் என மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், 'இந்திய விண்வெளி வீரர்கள் ககன்யான் திட்டம் மூலம் விண்வெளிக்கு அடுத்த ஆண்டு அனுப்பப்பட உள்ளனர். ஆந்திரத்தின் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவன் விண்வெளி மையத்திலிருந்து ககன்யான் திட்ட விண்கலத்தை விண்ணுக்கு அனுப்பும் முதல்கட்ட சோதனை அக். 21-இல் நடைபெறுகிறது.

ககன்யான் விண்கலம் ராக்கெட் மூலம் விண்வெளிக்கு கொண்டுசெல்லப்பட்டு, மீண்டும் பூமிக்கு கொண்டுவரப்படும். வங்கக் கடல் பகுதியில் விழும் இந்த விண்கலம், இந்திய கடற்படையினர் மூலம் மீட்கப்படும். விண்கலம் விண்ணை நோக்கிப் பயணிக்கும்போது, ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால், அதிலிருந்து விண்வெளி வீரர்கள் வெளியேறுவதற்கான சோதனையும் இதில் நடத்தப்படுகிறது.

ககன்யான் திட்டம் மூலம் வீரர்கள் விண்வெளிக்கு அனுப்பப்படுவதற்கு முன்பாக, 'வாயுமித்ரா' என்ற ரோபோவை அடுத்த ஆண்டு தொடக்கத்தில் விண்கலம் மூலம் விண்ணுக்கு அனுப்பி சோதனை செய்யப்பட உள்ளது' என்றார்.

# சென்னை துறைமுகம் சார்பில் ரூ.9,000 கோடி முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

திருவொற்றியூர், அக்.11: உலகளாவிய கடல்சார் உச்சி மாநாட்டின் ஒரு பகுதியாக ரூ. 9 ஆயிரம் கோடி முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் சென்னை துறைமுகம் கையொப்பமிட்டது.

இது குறித்து சென்னை துறைமுகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழி அமைச்சகம் சார்பில் மூன்றாவது உலகளாவிய கடல்சார் உச்சி மாநாடு வரும் அக்.17-இல் மும்பையில் தொடங்குகிறது. தொடர்ந்து மூன்று நாள்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் ரூ.15 லட்சம் கோடி மதிப்பீட்டிலான பல்வேறு திட்டங்களுக்கு உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலிருந்து முதலீடுகள் திரட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் சென்னை துறைமுகத் தலைவர் சுனில் பாலிவால், துணைத் தலைவர் எஸ்.விஸ்வநாதன் ஆகியோர் முன்னிலையில் புதன்கிழமை சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனம், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், உள்ளிட்ட நிறுவனங்களுடன் சுமார் ரூ.9 ஆயிரம் கோடிக்கான முதலீடுகளைப் பெறுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை துறைமுக போக்குவரத்து மேலாளர் எஸ்.கிருபாணந்தசாமி கையொப்பமிட்டு பரஸ்பரம் பரிமாறிக்கொண்டார்.



உலகளாவிய கடல்சார் மாநாடு நடைபெறுவதையொட்டி சென்னை துறைமுகம் சார்பில் ரூ.9,000 கோடி முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை பரிமாறிக்கொண்ட துறைமுகத் தலைவர் சுனில் பாலிவால். உடன், துறைமுக போக்குவரத்து மேலாளர் எஸ்.கிருபாணந்தசாமி, துறைமுகத் துணைத் தலைவர் எஸ்.விஸ்வநாதன்.

மேலும் சி.பி.சி.எல், ஹூண்டாய் மோட்டார்ஸ், கேடிவி ஹெல்த் ஃபுட்ஸ் உள்ளிட்ட நிறுவனங்களுடன் ரூ. 65 கோடி முதலீட்டிலான திட்டங்களுக்கு மும்பையில் நடைபெற உள்ள மாநாட்டில் சென்னை துறைமுகம் கையெழுத்திட உள்ளது.

மொத்தம் ரூ. 74 ஆயிரம் கோடிக்கு 13 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் சென்னை துறைமுகத்தால் கையெழுத்திடப்படுகிறது. மாநாட்டின் முதல் நாளான அக்.17 -அன்று தமிழ்நாடு அரசு மற்றும் சென்னை துறைமுகம் இணைந்து நடத்தும் முதலீடுகளுக்கான சிறப்புக் கூட்டத்தொடர் நடைபெற உள்ளது. இதில் கலந்து கொள்ள விரும்புவர்கள் https://maritimeindiasummit.com/conference-registration/ என்ற இணையத் தள முகவரியில் பதிவு செய்யலாம். இதற்கு கட்டணம் ஏதும் இல்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பட்டியலால் பயனில்லை

**எஸ். ஸ்ரீதுரை**

நமது குடும்பத்தில் உள்ளவர்களின் பிறந்த நாட்களை நாம் ஒவ்வொரு ஆண்டும் தவறாமல் கொண்டாடி வருகின்றோம். அது போன்றதொரு சடங்கினை யூஜிசி எனப்படும் பல்கலைக்கழக மானியக் குழுவும் ஒவ்வொரு ஆண்டும் நிகழ்த்தி வருகிறது. நமது நாட்டிலுள்ள பல்வேறு மாநிலங்களிலும் உரிய அங்கீகாரமின்றி சட்டவிரோதமாக இயங்கும் போலிப் பல்கலைக்கழகங்களின் பட்டியலை வெளியிடும் சடங்குதான் அது.

கடந்த சில நாட்களுக்கு முன்பு பல்கலைக்கழக மானியக்குழு வெளியிட்டுள்ள பட்டியலில் அங்கீகாரமின்றிச் செயல்படும் இருபது கல்வி நிறுவனங்கள் குறித்த விவரம் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆந்திர பிரதேசத்தில் இரண்டு, தலைநகர் தில்லியில் எட்டு, கர்நாடகத்தில் ஒன்று, கேரளத்தில் ஒன்று, மகாராஷ்டிரத்தில் ஒன்று, உத்தர பிரதேசத்தில் நான்கு, புதுச்சேரியில் ஒன்று,மேற்கு வங்கத்தில் இரண்டு என மொத்தம் இருபது போலிப் பல்கலைக்கழகங்கள் இயங்கிவருவதாக அப்பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய போலிப் பல்கலைக்கழகங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட மாநிலங்களின் உயர்கல்வித்துறை முதன்மைச் செயலர்களுக்குக் கடிதம் அனுப்பபட்டுள்ளது. இதுதவிர, மேற்கண்ட கல்வி நிறுவனங்களின் துணைவேந்தர்களுக்குப் பல்கலைக்கழக மானியக் குழுவின் செயலர் மணீஷ் ஜோஷி கடிதம் ஒன்றையும் எழுதியுள்ளார்.

'தங்களின் கல்வி நிறுவனம் போலிப் பல்கலைக்கழகங்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ளது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். மேலும், தங்களின் மோசடியான நடவடிக்கைகளுக்கு அப்பாவி மாணவர்கள் பலியாகி வருவதால், இது ஒரு கவலைக்குரிய விஷயமாக மாறியுள்ளது' என்று அந்தக்கடிதத்தில் மணீஷ் ஜோஷி தெரிவித்திருக்கிறார்.

சென்ற சில ஆண்டுகளில் வெளியிடப்பட்ட இதுபோன்ற பட்டியலில் தமிழகத்தைச் சேர்ந்த சில போலிப் பல்கலைக்கழகங்களும் இடம்பெற்றிருந்தன. இந்த ஆண்டு வெளியிடப்பட்ட பட்டியலில் அப்படி எதுவும் இல்லை என்பதால் நமது மாநிலத்தைச் சேர்ந்த மாணவர்களும், பெற்றோர்களும் சற்றே நிம்மதிப் பெருமூச்சு விடலாம்.

நமது நட்டில் போலிப் பல்கலைக்கழகங்கள் இயங்குகின்றன என்ற செய்தியைக் கேள்விப்பட்டு நாமெல்லாம் அதிர்ச்சி அடைந்த காலம் மாறி, இதெல்லாம் ஒரு செய்தியா என்று சலனமின்றிக் கடந்து செல்லும் நிலைமை உருவாகிவிட்டதாகவே தோன்றுகின்றது.

முன்பெல்லாம் கல்லூரிக்குச் சென்று படித்துப் பட்டம் பெறுவது என்பது மிகவும் கௌரவமான விஷயமாக இருந்தது. குடும்பத்தில் ஒருவர் பட்டதாரியாவது என்பதே பெரிய விஷயமாகக் கருதப்பட்டது. அவ்வாறு பெறுகின்ற பட்டமானது எந்தப் பல்லைக்கழகத்தினால் வழங்கப்படுகிறது என்பதைப் பொறுத்தே அது மதிப்பைப் பெறுகிறது.

சென்னைப் பல்கலைக்கழகம், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம் ஆகியவற்றிற்கென்று பாரம்பரியம் உண்டு. அவற்றின் பெயரில் வழங்கப்படும் பட்டங்களுக்கு சமூகத்தில் தனி மரியாதையும் உண்டு.

நமது நாட்டின் பிற மாநிலங்களிலும் இவை போன்று மதிப்பும் பாரம்பரியமும் மிகுந்த பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. இவ்வளவு ஏன், சென்னைப் பல்கலைக்கழகம் உள்ளிட்டவை தொடங்கிய அஞ்சல்வழிக் கல்வித் திட்டத்தில் பெறுகின்ற பட்டங்கள்கூட கல்லூரிகளில் சேர்ந்து நேர்முகமாகப் படித்துப் பெறுகின்ற பட்டங்களுக்கு நிகராக மதிக்கப்பட்ட காலம் ஒன்று இருந்தது.

பட்டப்படிப்பில் சேருவது என்பது ஒரு குறிப்பிட்ட பாடப்பிரிவில் ஆழ்ந்த ஞானத்தைப் பெறுவதற்குப் பயன்படவேண்டும். ஆனால், காலப்போக்கில் அரசு அல்லது தனியார் நிறுவனங்களில் வேலையைப் பெறுவதற்கான அடிப்படைத் தகுதியாக மட்டுமே அது மாறிப்போனது.

பெருகிவரும் மக்கள்தொகைக்கு ஏற்ப, கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கையையும் உயர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தங்களுடைய மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்கான கல்வித் திட்டங்களையும், அவற்றுக்கேற்ற கட்டணங்களையும் தாங்களே நிர்ணயித்துக் கொள்ளும் அதிகாரம் வழங்கப்பட்ட தனியார் பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கையும் அதிகமாயிற்று.

எவ்விதம் அரசுப் பல்கலைக்கழகங்கள் பல இருந்தாலும் அவற்றில் ஒருசில பல்கலைக்கழகங்கள் வழங்கும் பட்டங்களுக்கு மட்டுமே அதிக மதிப்பு இருக்கிறதோ, அவ்விதமே நம் நாட்டிலுள்ள தனியார் பல்கலைக்கழகங்களுக்குள் ஒருசிலவற்றின் பட்டங்களுக்கு மட்டுமே மதிப்பு இருக்கிறது. ஏனைய தனியார் பல்கலைக்கழகங்கள் வழங்கும் பட்டங்களை வெறும் அச்சடித்த காகிதங்களாக மட்டுமே கருத இயலும்.

அரசுப் பணிகளுக்கான வாய்ப்புகள் சுருங்கி, தனியார் நிறுவனங்கள் வழங்கும் வேலைவாய்ப்புகளையே இன்றைய இளைய தலைமுறையினர் பெருமளவு நம்பியிருக்கின்றனர். அத்தகைய நிறுவனங்கள் தாங்கள் தரமான கல்வி நிறுவனங்களாகக் கருதுகின்ற பல்கலைக்கழகங்களிலிருந்து பெற்ற பட்டங்களையே பணியாளர்களுக்கான அடிப்படைத் தகுதியாகக் கொள்கின்றன.

நேர்முகக் கல்வி மூலம் பட்டம் பெற்றவர்களையும், அஞ்சல் வழிக் கல்வி மூலம் பட்டம் பெற்றவர்களையும் அந்நிறுவனங்கள் சமமாகக் கருதாத நிலை உள்ளது. இந்நிலையில் போலியாக இயங்கும் பல்கலைக்கழகங்களின் விளம்பரக் கவர்ச்சியில் மயங்கி, பெரும் பொருட்செலவு செய்து பயிலும் மாணவர்கள் கதி என்னாவது? இளைய தலைமுறையினரின் எதிர்காலத்தையே வீணாக்கும் இத்தகைய போலிப் பல்கலைக்கழகங்களை அதிரடியாக இழுத்து மூடுவதுதானே சரியாக இருக்க முடியும்?

அதைவிடுத்து, ஆண்டுதோறும் போலிப் பல்கலைக்கழகங்களின் பட்டியலை வெளியிடுவதாலும், அவற்றின் துணைவேந்தர்களுக்குக் கடிதம் எழுதிக்கொண்டிருப்பதாலும் யாருக்கு என்ன லாபம்? எத்தனையோ அதிரடிகளைச் செய்யும் நமது மத்திய அரசு ஓர் அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்தாவது இத்தகைய போலிப் பல்கலைக்கழகங்களின் இயக்கத்தை நிறுத்தி, இளைய தலைமுறையினரைக் காக்க முன்வர வேண்டும்.

Activate Windows
Go to Settings to activate Windows

# தமிழகத்தில் வாகனங்கள் வரி உயர்வு: பேரவையில் மசோதா நிறைவேற்றம்

**சென்னை, அக். 11:** தமிழகத்தில் அனைத்து வாகனங்களுக்கும் வரிகள் உயர்த்தப்பட்டுள்ளன. இதற்கான சட்ட மசோதா பேரவையில் குரல் வாக்கெடுப்பு மூலம் புதன்கிழமை நிறைவேறியது.

வரிகள் உயர்த்தப்பட்டதன் தொடர்ச்சியாக இரு சக்கர-நான்கு சக்கர வாகனங்களின் விலை கணிசமாக உயரும். இதே போன்று ஆம்னி பேருந்துகளுக்கான இருக்கை வரி உயர்வால், அவற்றில் பயணிகளுக்கான கட்டணம் உயரும்.

தமிழக சட்டப் பேரவையில் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் மசோதாவைத் தாக்கல் செய்தார். அதில் கூறப்பட்டுள்ளதாவது: தமிழகத்தில் 2012-ம் ஆண்டுக்குப் பிறகு வாகனங்களுக்கான வரிகளை அரசு உயர்த்தவில்லை. இதனால் அரசுக்கு குறைவான வருவாயே கிடைக்கிறது. எனவே, மாநிலத்தின் நிதி ஆதாரத்தை உயர்த்துவதற்காக தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தில், நடைமுறையில் உள்ள வரிவிதிப்பு முறைகளைத் திருத்தம் செய்வதென அரசு முடிவு செய்து, திருத்தங்களை மேற்கொள்ள மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**பசுமை வரி – சாலைப் பாதுகாப்பு வரி:** ஓராண்டு முதல் 11 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கிக் கொண்டிருக்கும் மோட்டார் சைக்கிள்களுக்கான வாழ்நாள் வரி, அதன் விலையில் 8 சதவீதம் முதல் 18.75 சதவீதம் வரை நிர்ணயிக்கப்படுறது. மேலும், 15 ஆண்டுகள் நிறைவடையாத மோட்டார் சைக்கிள்களுக்கு 5 ஆண்டுகளுக்கான பசுமை வரி ரூ.750; மற்ற மோட்டார் வாகனங்களுக்கு ரூ.1,500 என நிர்ணயிக்கப்படுகிறது. புதிய வாகனங்களுக்கான சாலைப் பாதுகாப்பு வரியாக, மோட்டார்சைக்கிள்களுக்கு ரூ.375, இலகுரக வாகனங்களுக்கு ரூ.2,250, மற்ற வாகனங்களுக்கு ரூ.3 ஆயிரம் என நிர்ணயிக்கப்படுகிறது.

**கல்வி நிறுவனப் பேருந்துகளுக்கு...:** கட்டுமானத் தளவாட வாகனங்களுக்கு (டிப்பர், ஜேசிபி போன்றவை) ஆண்டு வரியாக ரூ. 15 ஆயிரம்; மாணவர்கள் மற்றும் பணியாளர்களின் போக்குவரத்துக்கான கல்வி நிறுவனப் பேருந்துகளுக்கு 7 நாள்களுக்கு ஓர் இருக்கைக்கு ரூ.45; பணியாளர்களின் போக்குவரத்துக்கான பிற நிறுவனங்களின் வாகனங்களுக்கு 7 நாள்களுக்கு ஒரு இருக்கைக்கு ரூ.100 என்ற வீதத்தில் வரி நிர்ணயம் செய்யப்படுகிறது.

**ஆம்னி பேருந்துகளுக்கு...:** சுற்றுலா வாகனங்கள் மற்றும் ஒப்பந்த வாகனங்களுக்கான (ஓட்டுநர் மற்றும் நடத்துநர் நீங்கலாக 35 பேர் பயணிக்கும் கொள்ளளவு கொண்ட வாகனம்) காலாண்டு வரி ரூ.4,900; 35 பேருக்கும் அதிகமானோர் பயணிக்கும் வாகனங்களுக்கு ரூ.3 ஆயிரம்; படுக்கையுடன் கூடிய ஆம்னி பேருந்துகளுக்கு இருக்கை ஒன்றுக்கு காலாண்டு வரி ரூ.3 ஆயிரம் முதல் ரூ.4 ஆயிரம் வரை வரி உயர்த்தப்படுகிறது.

பயணிகள் போக்குவரத்து மற்றும் வாடகைக்குப் பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு (ஓட்டுநர் அடங்கலாக 4 பேர் பயணிக்கும் ஆட்டோ உள்ளிட்ட வாகனங்கள் ) 5 ஆண்டு வரியாக ரூ.1,400 முதல் ரூ.6,000 வரை பயணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப வரி உயர்த்தப்படுகிறது.

**வாழ்நாள் வரி:** புதிய மோட்டார்சைக்கிள்களுக்கான வாழ்நாள் வரி, விலை ரூ.1 லட்சத்துக்கு மிகாத நிலையில் அதன் விலையில் 10 சதவீதம்; ரூ.1 லட்சத்துக்கு மேல் எனில் 12 சதவீதம் என நிர்ணயிக்கப்படுகிறது.

பழைய மோட்டார் சைக்கிள்களில் ஓராண்டு பழையதாக உள்ளவற்றுக்கு 8.25 சதவீதம் (ஒரு லட்சம் ரூபாய்க்கு உட்பட்டவை) மற்றும் ஒரு லட்சம் ரூபாய்க்கு மேற்பட்டவற்றுக்கு 10.25 சதவீதம்; 1 ஆண்டு முதல் 2 ஆண்டுகள் பழையதாக உள்ளதற்கு (ஒரு லட்சம் ரூபாய்க்கு உட்பட்டவை) 8 சதவீதம், ஒரு லட்சம் ரூபாய்க்கு மேற்பட்டவற்றுக்கு 10 சதவீதம் என வாழ்நாள் வரி நிர்ணயம் செய்யப்படுகிறது.

2 ஆண்டுகள் முதல் 11 ஆண்டுகளுக்கும் மேலாக ஓடிக் கொண்டிருக்கும் மோட்டார் சைக்கிள்களுக்கான வாழ்நாள் வரி, 6 சதவீதத்தில் இருந்து 9.75 சதவீதம் வரை (அதன் விலைக்கு ஏற்ப) நிர்ணயிக்கப்படுகிறது.

புதிய மோட்டார் சைக்கிள்களுக்கான வாழ்நாள் வரி, விலை ரூ.5 லட்சத்துக்கு மிகாத நிலையில் அதன் விலையில் 12 சதவீதம்; ரூ.5 லட்சம் முதல் ரூ.10 லட்சம் வரை விலை உள்ள வாகனங்கள் என்றால் 13 சதவீதம்; ரூ.10 லட்சம் முதல் ரூ.20 லட்சம் வரை விலை கொண்ட வாகனம் என்றால் 18 சதவீதம், ரூ.20 லட்சத்துக்கு மேல் விலை கொண்டவற்றுக்கு 20 சதவீதம் என நிர்ணயிக்கப்படுகிறது.

**சரக்கு வாகனங்களுக்கு...:** சரக்கு வாகனங்களில், சரக்கு ஏற்றிய பிறகு 3,000 கிலோ எடை கொண்ட வாகனங்களுக்கு ஆண்டு வரியாக ரூ.3,600 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 3 ஆயிரம் கிலோ முதல் 5,500 கிலோ எடையுள்ள வாகனங்களுக்கு காலாண்டு வரியாக ரூ.1,425, முதல் ரூ.3,100 வரை எடைக்கு ஏற்ப வரி உயர்த்தப்பட்டுள்ளது.

**மேல் வரி – ஆண்டு வரி விதிப்புகள்:** இழுவை வண்டிகளுக்கு (டிரெய்லர்) ஏற்றப்படும் எடையின் கொள்ளளவுக்கு ஏற்ப ரூ.500 முதல் ரூ.1,800 வரை வரி உயர்த்தப்படுகிறது. சென்னை, மதுரை, கோவை நகர சுற்றுப் பகுதிகளில் பிரத்யேகமாக இயக்க அனுமதிக்கப்பட்ட பேருந்துகளுக்கு மேல்வரி விதிக்கப்படுகிறது.

எடையேற்றப்பட்ட நிலையில் 600 கிலோவுக்கு மிகாத, 50 சிசி திறனுள்ள வாகனங்களுக்கு ஆண்டு வரி ரூ.135 முதல் ரூ.240 வரை அவற்றின் திறனுக்கு ஏற்ப ஆண்டு வரி விதிக்கப்படுகிறது.

ஓட்டுநருடன் சேர்த்து 7 முதல் 13 பேர் வரை ஏற்றக் கூடிய புதிய சுற்றுலா வாடகை சிருந்துகளுக்கான (மேக்சி கேப் வேன்) வாழ்நாள் வரி, அதன் விலையில் 12 சதவீதம் (ரூ.5 லட்சத்துக்கு உட்பட்டவை); 13 சதவீதம் (ரூ.5 லட்சம் முதல் ரூ.10 லட்சத்துக்கு உட்பட்டவை); 18 சதவீதம் (ரூ.10 லட்சம் முதல் ரூ.20 லட்சத்துக்கு உட்பட்டவை); 20 சதவீதம் (ரூ.20 லட்சத்துக்கும் மேற்பட்டவை) என மசோதாவில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**காங்கிரஸ் எதிர்ப்பு:** இந்த மசோதாவுக்கு பேரவை காங்கிரஸ் கட்சி குழுத் தலைவர் செல்வப் பெருந்தகை எதிர்ப்பு தெரிவித்தார். பேரவை பாமக குழுத் தலைவர் ஜி.கே.மணி அந்த மசோதாவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டார்.

தமிழக வாழ்வுரிமைக் கட்சி எம்.எல்.ஏ. வேல்முருகன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி எம்.எல்.ஏ. பாலாஜி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் எம்.எல்.ஏ. நாகைமாலி ஆகியோர் இந்த மசோதாவில் திருத்தங்கள் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். எனினும், மசோதா குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேறியது.

## இப்போதைய வாழ்நாள் வரி – பசுமை வரி எவ்வளவு?

பொதுமக்கள் பயன்படுத்தும் இருசக்கர வாகனங்களுக்கான வாழ்நாள் வரி இப்போது 8 சதவீதம் விதிக்கப்படுகிறது. கார் போன்ற நான்கு சக்கர வாகனங்களைப் பொருத்தவரை, ரூ.10 லட்சத்துக்குள் அவற்றின் விலை இருந்தால் ரசீதில் குறிப்பிடப்படும் விலையில் 10 சதவீதமும், ரூ.10 லட்சத்துக்கு மேல் இருந்தால் 15 சதவீதமும் வாழ்நாள் வரி விதிக்கப்படுகிறது.

பசுமை வரியைப் பொருத்தவரை, 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வாகனங்களுக்கு மட்டுமே வரி வசூலிக்கப்படும். 15 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட இரு சக்கர வாகனங்களுக்கு ரூ.500–ம், நான்கு சக்கர வாகனங்களுக்கு ரூ.1,000–ம் வசூலிக்கப்படும்.

EVA STALIN IAS ACADEMY

# சீனாவைப் போல இந்தியாவுக்கும் கடன்கள் அதிகம்: சர்வதேச நிதியம்

**வாஷிங்டன், அக். 11:** 'இந்தியாவுக்கும் சீனாவைப் போல கடன்கள் அதிகம் உள்ளன. ஆனால், அதனுடன் தொடர்புடைய இடர்ப்பாடுகள் சீனாவைவிடக் குறைவாக உள்ளன' என்று சர்வதேச நிதியத்தின் நிதி விவகாரத் துறை துணை இயக்குநர் ரூட் டீ மூயிஜ் தெரிவித்தார்.

மேலும், வரும் குறிப்பிட்ட காலத்தில் நிதிப் பற்றாக்குறையைக் குறைக்கும் வகையில் ஒரு லட்சிய நிதி ஒருங்கிணைப்புத் திட்டத்தை இந்தியா கொண்டிருக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

இந்தியாவின் கடன்நிலை குறித்து பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு அவர் அளித்த பேட்டி: இந்தியாவின் தற்போதைய கடனும் சீனாவைப் போன்று அதிகமாக உள்ளது. இந்தியாவின் கடன் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 81.9 சதவீதமாக உள்ளது. சீனாவின் கடன் அந்த நாட்டின் ஜிடிபியில் 83 சதவீதமாக உள்ளது. கரோனா பெருந்தொற்றுக்கு முன்பு இந்தியாவின் கடன் 75 சதவீதமாக மட்டுமே இருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் நிதிப் பற்றாக்குறை நடப்பு நிதியாண்டில் 8.8 சதவீதமாக கணிக்கப்பட்டுள்ளது. இதில் பெரும்பகுதியான 5.4 சதவீதம் வட்டிக்கான செலவினங்களால் ஏற்படுகிறது. முதன்மை பற்றாக்குறை 3.4 சதவீதமாக உள்ளது. சீனாவைப் போன்று வரும் ஆண்டுகளில் இந்தியாவின் கடன் அதிகரிக்க வாய்ப்பில்லை. அடுத்த 5 ஆண்டுகள் முடிவில் இந்தியாவில் கடன் சதவீதம் 1.5 சதவீதம் குறைந்து 80.4 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவின் தொடர்ச்சியான வளர்ச்சி அதற்கு காரணமாக இருக்கும். சீனாவுடன் ஒப்பிடும்போது இந்திய கடன்களில் இடர்ப்பாடுகள் குறைவாக உள்ளன. நாட்டின் நிதித் தேவைகளைக் கடினமாக்காத வகையில் அவ்வப்போது புதுப்பிக்கப்பட வேண்டிய அவசியமில்லாத நீண்டகால முதிர்வுகள் கொண்டதால் இந்திய கடன்களுக்கு இடர்ப்பாடுகள் குறைவாக இருக்கின்றன.

மேலும், இந்தியாவின் கடன்கள் பெரும்பாலும் உள்நாட்டுக் கடனாகவும், உள்நாட்டு நாணயத்தில் பெறப்பட்டிருப்பதாலும் இடர்ப்பாடுகள் தவிர்க்கப்படுகின்றன. அதேநேரத்தில், இந்தியாவின் சில மாநிலங்கள் அதிக கடன் சுமையைக் கொண்டுள்ளன. இது இந்தியாவுக்கும் குறிப்பிடத்தக்க இடர்ப்பாடுகள் இருப்பதை உறுதிப்படுத்துகின்றன என்றார்.